(மு. ப. 9–30)

திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, இந்த இந்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு அரசாங்க மருத்துவ மனையில் வேலை கொடுப்பது சாத்தியமில்லை என்றாலும், அவர்கள் தனிப்பட்ட முறையில் மருத்துவத் தொழில் செய்ய அரசாங்கம் உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : டாக்டராக இருந்தாலும், இன்ஜினியராக இருந்தாலும், வேறு தொழில் வல்லுநராக இருந்தாலும் தனிப்பட்ட முறையில் தொழில் செய்ய மத்திய அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கடன் விரைவில் கிடைக்க அரசு உதவி செய்யும்.

திரு. நா. வீராசாமி : இந்திய மருத்துவக் கல்வியைக் கற்றுக் கொடுக்கிற இடம் பாளையங்கோட்டையாக இருப்பதால் அதற்கு வரவேண்டிய முக்கியத்துவம் வரவில்லை. அதற்குக் கிடைக்க வேண்டிய விளம்பரம் கிடைக்கவில்லை. சென்னை நகரில் அப்படிப்பட்ட கல்லூரியை வைத்தால் இந்திய மருத்துவக் கல்வியின் தரம் மேலும் உயர வாய்ப்பிருக்கும். அப்படிப்பட்ட யோசனையை அரசாங்கம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நாற்றங்காலில் விதைத்துத்தான் இன்னொரு இடத்தில் பிடுங்கி பயிர் நடப்படுகிறது என்றாலும் பாளையங்கோட்டையில் இந்தக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டு 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆகவே, கதிர்விடுகிற பயிராகிவிட்டதால் இப்போது பிடுங்கி வேறு இடத்தில் நட முடியாது.

கோவையிலுள்ள குப்புசாமி நாயுடு மருத்துவ மனை.

*378 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவையிலுள்ள குப்புசாமி நாயுடு மருத்துவ மனையில் புற்று நோய் சிகிச்சைப் பிரிவு உள்ளதா?

(இ) அம்மருத்துவ மனைக்கு அரசால் அளிக்கப்படும் சலுகைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மருத்துவ மனையைப் பராமரிக்க தொடர் மானியமும், கட்டிடங்களைக் கட்டுவதற்காகவும், இயந்திரங்கள் கருவிகள் முதலியன வாங்குவதற்காகவும் தொடராமானியமும் இந்த நிறுவனத்திற்கு அரசு வழங்கியுள்ளது.

திரு. எ. சுப்பிரமணியம் : குப்புசாமி நாயுடு மருத்துவ மனை பெண்கள் மருத்துவ மனை. ஆண்களுக்கு அதிகமாக புற்றுநோய் ஏற்படுகிற காரணத்தினால், கோவையில் இருக்கிற இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் ஆண் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருவார்களா?

1974 மார்ச் 12]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் சொல்கிற விவரம் தவறு. குப்புசாமி நாயுடு மருத்துவ மனையில் உள்ள கான்சர் வார்டில் 36 படுக்கைகள் இருக்கின்றன என்றால் அவற்றில் ஆண்களுக்கு 18 படுக்கைகள். பெண்களுக்கு 18 படுக்கைகள். பெண்களுக்கு மட்டும் என்ற முறை இல்லை. ஆண்களுக்கும் இந்தப் பணி அங்கே நடைபெறுகிறது.

திரு. கே. என். குமாரசாமி : கோவையிலுள்ள குப்புசாமி நாயுடு மருத்துவ மனையில் செலவு அதிகமாகிற காரணத்தினால், அங்கேயே இன்னும் கொஞ்சம் அதிகமாக தர்ம வார்டு படுக்கைகளை அதிகப்படுத்த அரசு சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசாங்க மருத்துவ மனைகளைவிட இன்னும் அதிகக் கவனத்தோடு நடைபெறுவது தனியார் மருத்துவ மனை தான். சிகிச்சை வழங்கப்படுகிறபோது சிறப்பாகக் கவனம் செலுத்துவதற்கு வசதி இருக்க வேண்டுமென்றால் படுக்கை எண்ணிக்கைகளை அதிகப் படுத்தக் கூடாது. இன்றைக்கே 250 படுக்கைகளில் 141 படுக்கைகள் இலவசப் படுக்கைகளாக அங்கே இருக்கிறபோது இதை அதிகப்படுத்துங்கள் என்று கேட்பது அவ்வளவு ஏற்புடையதாக இருக்காது என்று நான் அஞ்சு கிறேன்.

Primary Health Centre, Karingal.

*379 Q. Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state whether there are proposals under the consideration of the Government to convert the existing Primary Health Centre at Karingal in Kanyakumari district into a Dispensary?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உறுப்பினர் அவர்கள் கரிங்கல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக மாற்றும் உத்தேசம் அரசிடம் உள்ளதாவென கருத்துப்பட வினவியுள்ளார். அது குறித்து தற்போது அரசிடம் செயற் குறிப்பு எதுமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, அங்கே வேறு மருத்துவ மனை எதுவும் இல்லாத காரணத்தினால், மீண்டும் இதைப் பரி சீலனை செய்து இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசாங்க மருத்துவ மனையாக எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது ஒவ்வொரு ஒன்றியத்திலும் 6 படுக்கை வசதிகளுடன் ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ் வருகிறது. ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசாங்க மருத்துவ மனையாக எடுத்துக்கொண்டால் மற்ற 378 பேர்களும் அப்படி எடுத்துக்கொள்ளும்படி கேட்பார்கள். நிதி வசதி இராது.